ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2418/13 - 2025 ජනවාරි මස 07 වැනි අඟහරුවාදා - 2025.01.07

2418/13 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் இல.: 4-3/18/2020/WS/32.
பி. செ. தொடர்பு இல.: THI/LND/L2/ACQVI/159.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் திஹகொட பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 349 - A, நாரங்கல கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நிலப்பரப்பு வரைபட இலக்கம் 820143 இன் வலய இலக்கம் 01, தாள் இலக்கம் 1 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 1**
காணியின் பெயர்: ஜம்புகஹலியத்த; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: சேனா நாயக்க கமகே சாலிய கோவிந்த, 'அயன்சா' நாரங்கல, கரகொட, உயன்கொட; விஸ்தீரணம்: 0.0060 ஹெக்டயார்.

**துண்டு இல. 2**
காணியின் பெயர்: ஜம்புகஹலியத்த; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: சேனாநாயக்க கமகே சாலிய கோவிந்த, 'அயன்சா' நாரங்கல, கரகொட, உயன்கொட; விஸ்தீரணம்: 0.0253 ஹெக் டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம்



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு திஹகொட பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும்படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டி. எச். யூ. சந்தமாலி,
பிரதேச செயலாளர்,
திஹகொட.

பிரதேச செயலகம்,
திஹகொட.
2025, சனவரி 03

EOG 01 - 0063